செ.வெ.எண். 27 நாள்:11.10.2021

**குழந்தை திருமணம் தடுப்பு பணிகள் குறித்து ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டம் மாவட்ட ஆட்சித் தலைவர் டாக்டர். வி.ஜெயசந்திர பானுரெட்டி இ.ஆ.ப. அவர்கள் தலைமையில் இன்று (11.10.2021) நடைபெற்றது.**

**குழந்தை திருமணம் செய்யும் பெற்றோர்கள் மற்றும் உறவினர்கள் மீது சட்ட பூர்வமான நடவடிக்கை எடுத்து வழக்கு பதியப்படும் என மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் எச்சரிக்கை**

கிருஷ்ணகிரி மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில், குழந்தை திருமணம் தடுப்பு மற்றும் விழிப்புணர்வு ஏற்படுத்துவது குறித்து ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டம் மாவட்ட ஆட்சித் தலைவர் டாக்டர்.வி.ஜெயசந்திர பானுரெட்டி இ.ஆ.ப. அவர்கள் தலைமையில் இன்று (11.10.2021) நடைபெற்றது.

**மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் பேசும்பொழுது:**

கிருஷ்ணகிரி மாவட்டத்தில், குழந்தை திருமணம் நடைபெறுவதை தடுக்க பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகிறது. ஜனவரி 2021 முதல் இன்று வரை 61 குழந்தை திருமணம் தடுத்து நிறுத்தப்பட்டுள்ளது. குழந்தை திருமணம் குறித்து 1 வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது. குழந்தை திருமணம் மற்றும் போக்ஸோ சட்டத்தின் கீழ் 13 வழக்குகள் பதியப்பட்டுள்ளது. மேலும் கிருஷ்ணகிரி மாவட்டத்தில் குழந்தை திருமணம் ஏற்படுவதை தடுக்க பள்ளி ஆசிரியர்கள், வருகின்ற 18.10.2021 முதல் ஒரு மாத காலம் பள்ளிகளில் விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டும். சைல்டு லைன், சமூக நலத்துறை அலுவலர்கள் ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சி திட்ட அலுவலகள், கிராம நிர்வாக அலுவலர்கள், கிராம நிர்வாக அலுவலக உதவியாளர்கள் மற்றும் காவல் துறையினர் ஒவ்வொரு கிராமத்திலும் குழந்தை திருமணம் நடைபெறுவதை தடுக்க தொடர்ந்து கண்காணிக்க வேண்டும். மேலும் குழந்தை திருமணத்தால் ஏற்படும் பாதிப்புகள் குறித்து விழிப்புணர்வு துண்டு பிரசுரங்கள் வழங்க வேண்டும்.

குழந்தை திருமணம் செய்ய முயற்சி செய்யும் பெற்றோர் மற்றும் உறவினர்கள் மீது காவல் துறையினர் வழக்கு பதிவு செய்ய வேண்டும். ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சி திட்ட பணியாளர்கள் எந்த கிராமத்தில் அதிகமாக 18 வயதிற்குபட்டவர்கள் கர்ப்பிணியாக உள்ளனர் என்ற விவரத்தினை மாவட்ட நிர்வாகத்திற்கு உடனடியாக தகவல் தெரிவிக்க வேண்டும். 9 முதல் 12 வகுப்பு வரை பயிலும் மாணவியர்கள் தொடர்ந்து 2 அல்லது 3 நாட்கள் பள்ளிக்கு வரவில்லை என்றால் ஆசிரியர்கள் அவர்களை கண்காணித்து உடனடியாக தகவல் தெரிவிக்க வேண்டும் என மாவட்ட ஆட்சித் தலைவர் டாக்டர்.வி.ஜெயசந்திர பானுரெட்டி இ.ஆ,ப. அவர்கள் அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

இக்கூட்டத்தில் மாவட்ட வருவாய் அலுவலர் திருமதி.எஸ்.ராஜேஸ்வரி, கூடுதல் காவல் கண்காணிப்பாளர் திரு.வி.ராஜீ, மாவட்ட சமூக நல அலுவலர் திருமதி.பி.பூங்குழலி, மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் திருமதி.கே.பி.மகேஸ்வரி, மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் கலந்துக்கொண்டனர்.

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம் கிருஷ்ணகிரி.